மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை

மூன்றாந் தவணை – 2018

| வரலாறு I | | 33 | T | I | | 01 மணித்தியாலம் |
|---|---|---|---|---|---|---|

கவனிக்க :

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்
- 01 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
- விடைத்தாளில் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

01. தீபவம்சம் பின்வரும் எந்த மன்னனின் ஆட்சி காலம் முடிவுவரை இந்நாட்டின் அரசியல், மற்றும் பௌத்தசமயம் தொடர்பான தகவல்களை வழங்குகின்றது.

1) துட்டைகைமுனு 2) மகாசேனன்

3) 1ம் பராக்கிரமபாகு 4) வலகம்பாகு

02. இலங்கை வரலாற்றை அறிய உதவும் போர்க்காவியமாக அமையும் நூல்

1) மயுரசந்தேசய 2) பெரகும்பா சிரித்த 3) ராஜாவலிய 4) சீதாவாக்க சட்டன

03. இலங்கைக்கு வருகை தந்து நேரடி அனுபவங்களைப் பெற்று இலங்கைபற்றி எழுதியுள்ள எழுத்தாளர்களில் ஒல்லாந்து நாட்டு இலக்கிய நூலாசிரியர் யார்?

1) பிலிப்ஸ்பல்டியஸ் 2) ரிபைரோ

3) பாகியன் 4) பிளினி

04. இலங்கையில் மரபு ரீதியான தொல்பொருட்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் ஏனெனில்

1) சுற்றுலாத்துறையின் வருகைக்கு காரணமாக அமைவதினால்

2) இலங்கையின் தனித்துவத்தை எடுத்துக்காட்ட காரணமாக அமைவதனால்

3) எதிர்கால சந்ததியினருக்கு காட்டவேண்டுமென்பதால்

4) கடந்த கால ஆட்சியாளர்களின் செயற்பாடுகளை அறிந்து கொள்ள முடியும் என்பதனால்

05. ஆங்கிலேய கப்பல் மாலுமியின் மகனான றொபேட்நொக்ஸ் கப்பல் விபத்து காரணமாக இலங்கையை வந்தடைந்த போது அவரை சிறையிலடைத்த மன்னன்

1) 1ம் இராஜசிங்கன் 2) சிறிவிஜய ராஜசிங்கன்

3) இராஜாதி இராஜ சிங்கன் 4) 2ம் இராஜசிங்கன்



kalvi.lk

06. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதர்களின் வளர்ந்த ஆண் ஒருவரினதும் பெண் ஒருவரினதும் மூளையின் அளவு முறையே
1) 1700 கனசென்ரி மீற்றரும் 940 கன சென்ரி மீற்றரும்
2) 1600 கனசென்ரி மீற்றரும் 920 கன சென்ரி மீற்றரும்
3) 1740 கனசென்ரி மீற்றரும் 960 கன சென்ரி மீற்றரும்
4) 1650 கனசென்ரி மீற்றரும் 900 கன சென்ரி மீற்றரும்

07. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய கற்சாதனங்கள் கிடைக்கப்பெற்றுள்ள பூந்தல வெல்லே கங்கொட பிரதேசத்தில் இரணைமடு படிவுக்குரிய கற்கால சரளைக்கற்படிவு கால அளவீட்டிற்கமைய
1) இருபத்தெண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.
2) முப்பத்தெண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.
3) எண்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.
4) ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

08. பின்வருவனவர்களுள் தன்னை குபேரக் கடவுளாகக் கருதிக்கொண்ட மன்னன்
1) நிஸ்ஸங்கமல்லன்
2) 1ம் காசியப்பன்
3) குட்டகண்ண அபய
4) 5ம் காசியப்பன்

09. பின்வரும் எந்த மன்னனுடைய காலத்தில் அரசவரி அறவீடு முறைப்படுத்தப்பட்டதுடன் நாட்டை நிர்வாக அலகுகளாக பிரித்து நிர்வகிப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது?
1) வசபன் 2) துட்டகைமுனு 3) 1ம் விஜயபாகு 4) பண்டுகாபயன்

- கர்ப்பிணித் தாய்மாரின் தேவைக்காகப் பிரசவ விடுதிகளைக் கட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட மன்னன்
- காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்ட நோயாளர்களைப் பராமரிக்கவென தனியான வைத்தியசாலை ஒன்றை நிறுவிய மன்னன்

10. மேற்கூறிய இரண்டு தகவல்ளுடன் தொடர்புடைய மன்னர்கள் முறையே
1) புத்ததாஸ, நான்காம் காசியப்பன்
2) நான்காம் காசியப்பன், புத்ததாஸ
3) முதலாம் உபதிஸ்ஸ, நான்காம் காசியப்பன்
4) நான்காம் காசியப்பன், முதலாம் உபதிஸ்ஸ

11. புராதன காலத்தில் நீண்டதூரத்தை அளக்க பயன்படுத்தப்பட்ட அலகு அல்லாதது எது?
1) கவ்வ 2) யொதுன 3) வியத்த 4) உசக

12. இலங்கையில் சமனலவெவ இரும்பு உருக்குலை எந்த மாகாணத்தில் கண்டறியப்பட்டது?
1) ஊவா மாகாணம்
2) மத்திய மாகாணம்
3) தென்மாகாணம்
4) சப்பிரகமுவ மாகாணம்

13. கல்வெட்டு மூலாதாரங்களில் வாய்க்கால்களில் மீன்பிடிப்பதற்காக அரசுக்குச் செலுத்திய வரி எவ்வாறு அழைக்கப்பட்டது?
1) தக்கபதி 2) மதரமஞ்சக்க 3) போஜக்கபதி 4) கெதிஅட

14. கி.பி 9ஆம் நூற்றாண்டில் நிலவிய உள்நாட்டு வர்த்தகம் தொடர்பான சட்டங்களைக் கூறும் சொரபொரவெவக் கல்வெட்டை அமைத்த மன்னன்
1) நான்காம் மகிந்தன்
2) ஐந்தாம் காசியப்பன்
3) நான்காம் காசியப்பன்
4) மூன்றாம் உதய



kalvi.lk

15. பின்வரும் நிரல் Iஇல் இலங்கையில் வரலாற்றுக் காலத்தில் காணப்பட்ட கிராமியக் குடியிருப்புக்கள் சில குறிப்பிடப்பட்டுள்ளன நிரல் II ஆனது அவற்றின் பிரதான பொருளாதார நடவடிக்கைகளைக் குறித்துக் காட்டுகின்றது.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. வட்டகீகாம | A. விவசாயம் |
| 2. மணிகாரகாம | B. இரத்தினம் அகழ்வோர் |
| 3. கும்பகாரகாம | C. விலங்கு வேளாண்மை |
| | D. மட்பாண்டம் வனைதல் |
| | E. தச்சுத்தொழில் |

நிரல் I ற்கு அமைவாக நிரல் II ஐ ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடை எது?

1) E, B, D 2) B, D, E 3) C, D, E 4) A, C, E

16. கலிங்கமாகன் பொலன்னறுவையை ஆட்சி செய்து கொண்டிருந்த போது மகியங்கனைக்கு அண்மையில் மினிப்பே என்னும் இடத்தில் மகாவலி கங்கைக்கரையில் அமைந்த மலையில் சுயாதீன ஆட்சியை நடாத்திச் சென்ற பிரதேசத்தின் தலைவர்

1) சுபதளபதி 2) புவனேபாகு (ஆதிபாதன்)

3) சங்கதளபதி 4) வீரவாகு

17. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளைக் கவனிக்க

A. தர்மசேன தேரரால் சத்தர்மரத்னாவலிய நூல் எழுதப்பட்டமை

B. அம்புலுகல குமாரன் ஏழாம் பராக்கிரமபாகுவை பதவி நீக்கிவிட்டு எட்டாம் வீரபராக்கிரமபாகு என்ற பெயரில் முடிசூடிக் கொண்டமை

C. பாளிமொழியிலிருந்து பன்சிய பனஸ் ஜாதகக் கதை சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டமை

D. இலங்கையில் இருந்து எகிப்துக்கு அனுப்பப்பட்ட வர்த்தகத் தூதுக்குழுவினரை கெய்ரோ நகரில் வைத்து எகிப்திய சுல்தான் வரவேற்றமை.

மேற்கூறப்பட்ட வரலாற்று நிகழ்வுகளை அவை நடைபெற்ற கால ஒழுங்கில் கொண்ட சரியான விடை எது?

1) A, C, B, D 2) C, A, D, B 3) C, D, A, B 4) A, D, C, B

18. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த காலப்பகுதியில் கோட்டையை ஆட்சி செய்த மன்னன் யார்?

1) ஆறாம் பராக்கிரமபாகு 2) எட்டாம் வீரபராக்கிரமபாகு
3) ஆறாம் புவனேபாகு 4) ஏழாம் பராக்கிரமபாகு

19. கண்டி இராச்சியத்தில் உரிமையையும் அனுபவித்தலையும் அடிப்படையாகக் கொண்டு அரச மாளிகைக்காகப் பயன்படுத்திய நிலம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

1) கபடாகம் 2) நிந்தகம் 3) விகாரகம் 4) பரவேனிகம்

20. கண்டி இராச்சியத்திலே போர்த்துக்கேயர் தங்கள் அதிகாரத்தை ஏற்படுத்துவதற்கு கையாண்ட தந்திரம்

1) கோனப்பு பண்டாரனை அரசனாக்கியமை

2) கண்டிப் பிரதானிகளின் உதவியைப் பெற்றுக்கொண்டமை

3) கண்டி இராச்சியத்திலே கத்தோலிக்க சமயத்தை பரப்பியமை

4) தங்கள் பாதுகாப்பில் இருந்த குசுமாசனதேவிக்கு அரச பதவி வழங்கியமை



kalvi.lk

21. யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் தவறான கூற்று எது
1) யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னாக விஜய கூழங்கை என்னும் ஆரியச்சக்கரவர்த்தி ஆட்சி செய்துள்ளான்.
2) யாழ்ப்பாண இராச்சியம் பற்றி அறிய யாழ்ப்பாண வைபவமாலை நூல் துணைபுரிகின்றது
3) ஆறாம் பராக்கிரமபாகு அம்புலுகல குமாரனின் மூலம் யாழ்ப்பாணத்தை கோட்டை இராசதானியின் கீழ் கொண்டு வந்தான்.
4) வசப மன்னன் காலத்தில் யாழ்குடாநாடு நாகதீப (நகதிவ) என்று அழைக்கப்பட்டது.

➢ **அட்டவணையை அவதானித்து 22 ஆம் 23 ஆம் வினாக்களுக்கு விடை அளிக்குக.**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| A. கலிலியோ கலிலி | D. கோள்கள் அனைத்தும் சூரியனை நீள் வட்டப் பாதையில் சுற்றி வருதல் | G. இங்கிலாந்து |
| B. ஐசக் நியூட்டன் | E. தொலைநோக்கி | H. ஜேர்மனி |
| C. ஜொஹென்ஸ் கெப்லர் | F. புவியீர்ப்பு விசை | I. இத்தாலி |

22. நிரல் II இல் E உடன் தொடர்புடைய மறுமலர்ச்சிக்கால விஞ்ஞானியையும் அவருடைய தாய் நாட்டையும் குறிக்கும் விடை எது?
1) A யும் I யும் 2) B யும் I உம் 3) B யும் H உம் 4) A யும் H உம்

23. நிரல் II இல் D யுடன் தொடர்புடைய மறுமலர்ச்சிக்கால விஞ்ஞானியையும் அவரது தாய் நாட்டையும் குறிக்கும் விடை எது?
1) B யும் H உம் 2) C யும் G யும் 3) A யும் I யும் 4) C யும் H உம்

24. பல்வேறு கண்டு பிடிப்புக்களைச் செய்த சிலரின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A. ஜோர்ச் ஸ்டீவன்சன் B. எட்மன் காட்ரைட்
C. ரிச்சட் ஆக்ரைட் D. டெம்லர் E. குக்லி மார்க்கோனி
மேற்குறிப்பிட்டுள்ளவர்களுள் கைத்தொழிற்புரட்சியின் போது போக்குவரத்துத்துறையுடன் தொடர்புடைய கண்டு பிடிப்புக்களைச் செய்தோரைக் காட்டும் விடைஎது?
1) B, E 2) B, C 3) A, E 4) A, D

25. கைத்தொழில் புரட்சியின் காரணமாக முன்னேற்றமடைந்த பொருளாதார விளைவைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
1) நகர மயமாக்கலில் முன்னேற்றம் விரைவுபடுத்தப்பட்டமை
2) பொதுவுடமைவாதம், தாராண்மை வாதம் போன்ற அரசியற்கொள்கைகள் தோற்றம் பெற்றமை
3) வகுப்பு ரீதியான சமூகவமைப்பு தோற்றம் பெற்றமை
4) பல்தேசிய வணிகங்கள் முன்னேற்றம் அடைந்தமை

26. பிரித்தானியர் இங்கையைக் கைப்பற்ற வேண்டுமென்ற எண்ணம் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணி எது?
1) கிறிஸ்தவ மதத்தினைப் பரப்புதல்
2) இலங்கை கறுவாவின் உயர்தரம்
3) திருகோணமலைத் துறைமுகத்தின் அமைவிடம்
4) பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்கான காணிகளைப் பெற்றுக்கொள்ளல்



kalvi.lk

27. கி.பி 1762இல் ஆங்கிலேயத் தூதுவனாகிய ஜோன்பைபஸ் கண்டிக்கு வருகை தந்த போது கண்டி இராச்சியத்தின் ஆட்சியாளன் யார்?

1) கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் 2) இரண்டாம் இராஜசிங்கன்

3) இராஜாதி ராஜசிங்கன் 4) 1ம் விமலதர்ம சூரியன்

28. பின்வருவனவர்களுள் மாளிகாகந்த வித்தியோதய பிரிவெனாவைத் தோற்றுவித்தவர் யார்?

1) வலானை சித்தார்த்த தேரர் 2) இரத்மலானை தரம்லோகதேரர்

3) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் 4) புலத்கம ஸ்ரீ சுமண திஸ்ஸ தேரர்

➢ **கீழே குறிப்பிடப்பட்டுள்ள A தொடக்கம் F வரையான கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 29ஆம் 30ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.**

A. நாடு ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டமை

B. தேசிய அரசு பேரவை

C. நிர்வாகக் குழுமுறை

D. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை

E. ஆளுநர் நாயகம் பதவி

F. பொதுசன அபிப்பிராயத் தேர்தல்

29. டொனமூர் யாப்புச் சீர்திருத்தம், சோல்பரியாப்புச் சீர்திருத்தம் ஆகியவற்றுடன் தொடர்புடைய தகவல்களை கொண்டிருக்கும் விடை எது?

1) B யும் C யும் 2) C யும் E யும் 3) D யும் F உம் 4) E யும் F உம்

30. 1972ம் ஆண்டின் அரசியல் யாப்பு, 1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு ஆகியவற்றில் உள்ளடங்கிய தகவல்களை கொண்டிருக்கும் விடை எது

1) E யும் F உம் 2) B யும் C யும் 3) D யும் E யும் 4) B யும் F உம்

31. இலங்கையில் முதன்மையானதும் இறுதியானதுமான அதிகாரம் பெற்ற உச்ச நீதிமன்றத்தின் தலைவர் யார்

1) சட்டமா அதிபர் 2) ஜனாதிபதி 3) பிரதம நீதியரசர் 4) நீதி அமைச்சர்

➢ **கீழே A, B, C, D ஆகியவற்றால் தரப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு 32 தொடக்கம் 35 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.**

A. 1 கோப்பிப் பயிர்ச்செய்கை
2 ஹெமிலியா வெஸ்டாக்ஸ்

B. 1 சாமுவெல் மோஸ்
2 தொடர்பாடல்துறை

C. 1 1818ஆம் ஆண்டின் சுதந்திரப் போராட்டம்
2 மியூரன் குழுவின் சிபாரிசுகள்

D. 1 சுமணதிஸ்ஸ தேரர்
2 பௌத்த மறுமலர்ச்சி

32. முதலாம் நபரின் கண்டுபிடிப்பு காரணமாக இரண்டாவது உருவாகியது

1) A 2) B 3) C 4) D

33. முதலாவது வீழ்ச்சிக்கு இரண்டாவது காரணமாகியது

1) A 2) B 3) C 4) D

34. முதலாம் நபரின் செயற்பாடு காரணமாக இரண்டாவது துரித வளர்ச்சி கண்டது

1) A 2) B 3) C 4) D

35. முதலாவதிற்கும் இரண்டாவதிற்கும் இடையில் எந்தவித தொடர்பும் இல்லாத கருத்துச்சோடி

1) A 2) B 3) C 4) D



kalvi.lk

36. 19ம் நூற்றாண்டின் இலங்கையில் நிலவிய சமய பண்பாட்டு விழிப்புணர்ச்சி தொடர்பான நான்கு சோடிகளுள் பொருத்தமற்ற சோடி எது?

1) ஆறுமுகநாவலர் - சைவப்பிரகாச வித்தியசாலை ஆரம்பிக்கப்பட்டமை

2) அறிஞர் எம்.சி.எம்.சித்திலெப்பை – முஸ்லீம் கல்விச் சபையைத் தோற்றுவித்தமை

3) அநாகரிக தர்மபால – மகாபோதி சங்கத்தை ஆரம்பித்தமை

4) வலானே சித்தாத்ததேரர் - பேலியகொட வித்தியாலங்கார பிரிவேனாவை தோற்றுவித்தமை

37. இலங்கையின் அரசியல் தலைவர்களும் அவர்கள் தலைமை தாங்கிய அரசியல் கட்சிகளும் தரப்பட்டுள்ளன இவற்றுள் பிழையான சோடி எது?

1) கொல்வின் R.D சில்வா - இலங்கை கம்யூனிஸ்ட்சுட்சி

2) S.W.R.D பண்டார நாயக்கா – சிறிலங்கா சுதந்திரக் கட்சி

3) S.J.V செல்வநாயகம் - சமஷ்டிக் கட்சி

4) A.E குணசிங்க – தொழிற்கட்சி

38. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பிற்காக ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் உருவாக்கப்பட்ட அமைப்பு

1) வோர்சோ 2) நேட்டோ

3) சார்க் 4) அணிசேரா நாடுகள்

39. சர்வதேச சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமையும் மோதல்கள் குறித்து ஆராய்ந்து பார்த்து அவற்றினை சமதானமாகத் தீர்ப்பதற்கு சிபார்சுகளை முன்வைத்தல்

மேற்கூறிய கடமையுடன் தொடர்புடைய ஐக்கியநாடுகளில் நிறுவனம் யாது?

1) பாதுகாப்புச் சபை 2) பொதுச்சபை

3) செயலகம் 4) சமூக பொருளாதார சபை

40. இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற காலத்தில் ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி யார்?

1) ஜோசப்ஸ்டாலின் 2) வின்சன்ட் சேர்ச்சில்

3) பிராங்னின் டீ ரூஸ்வெல்ட் 4) க்ளெமன்ஷோ



kalvi.lk

மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை

மூன்றாம் தவணை – 2018

| வரலாறு II | | 33 | T | II | | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|---|---|---|---|

- ❖ **பகுதி Iஇன் முதலாம் வினா கட்டாயமானது.**
- ❖ **பகுதி II இல் இருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இல் இருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக**
- ❖ **எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.**
- ❖ **இந்த வினாத்தாளுக்கு 120 புள்ளிகள் வழங்கப்படும்.**

## பகுதி I

01. (அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள இலங்கைப்புறவுருவப் படத்திலும் (II) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள உலகப்புறவுருவப் படத்திலும் குறித்துப்பெயரிடுக.

i. மாணிக்க கங்கை, திஸ்ஸவாவி, வல்லிபுரம், மகாவாலுகாம, திருகோணமடு, காகம, மகாவலி கங்கை, புத்தளம், கம்பளை, பராக்கிரம சமுத்திரம், பாகியன்கல, ஜம்புகோளப்பட்டினம் (12 புள்ளிகள்)

ii. கொன்ஸ்தாந்தி நோபிள், மலாக்காநீரினை, ஸ்பெயின், பாரசீக வளைகுடா, பிரான்ஸ், கஸ்பியன்கடல் (6 புள்ளிகள்)

ஆ. i. கீழே A, B, C, மற்றும் D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக

A. அபயகிரி விகாரையைக் கட்டிய மன்னன்

B. இரண்டாம் உலகப்போருடன் தொடர்புடைய ஜேர்மானிய நாசிச ஆட்சியாளன்

C. கண்டி இராச்சியத்தில் நாயக்கர் வம்சத்தினரின் ஆட்சியை ஆரம்பித்து வைத்த முதலாவது நாயக்கர் வம்ச ஆட்சியாளன்.

D. கி.பி 1946ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியை நிறுவிய தலைவர் (4 புள்ளிகள்)




kalvi.lk

A, B ஆகிவற்றினால் கீழ் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து தரப்பட்ட வினாக்களுக்கான விடைகளை ஒழுங்குமுறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.



(A)

ii. 1. A யினால் காட்டப்படும் நிர்மாணிப்பு யாது?
2. இந்த நிர்மாணிப்பு எக்காலப் பகுதிக்குரியது?
3. இது அமைந்து காணப்படும் மாவட்டம் எது?
4. இது அன்றைய சமூகத்தில் யாரால் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகின்றது. (4 புள்ளிகள்)



(B)

iii. 1. B குறிக்கும் நிர்மாணிப்பின் பெயர் என்ன?
2. இந்த நிர்மாணிப்பின் முக்கியமான நோக்கம் என்ன?
3. இந்த நிர்மாணிப்பை மேற்கொள்வதற்கு இலங்கைக்கு உதவி புரிந்த நாடு எது?
4. இந்த நிர்மாணிப்புக்கு கிழக்கு பக்கமாக காணப்படும் அணைக்கட்டின் பெயர் என்ன?

(4 புள்ளிகள்)

## பகுதி II

02. i. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதிக்குரிய மனிதன் வாழ்ந்ததாகக் கருதப்படுகின்ற தாழ்நில ஈரவலயக் குகைகள் மூன்றினைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

ii. இலங்கையில் வராற்றுக்கு முற்பட்ட காலப்பகுதிக்குரிய மனிதன் வாழ்ந்த பின்வரும் கற்குகைகள் மற்றும் கரையோர வெட்டவெளிகள் காணப்படுகின்ற மாவட்டங்களைக் குறிப்பிடுக.

A. பாகியன்கல B. பெல்லன்பதி பெலஸ்ஸ
C. பூந்தல D. சீகிரிய பொத்தான (4 புள்ளிகள்)

iii. a. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் உட்கொண்ட உணவின் தன்மை பற்றி அதிகளவிலான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்ற இரண்டு காலநிலை வலயங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

b. மேற் குறிப்பிடப்பட்ட காலநிலை வலயங்களில் ஒன்றில் இருந்து வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் பெற்றுக்கொண்ட உணவுகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iv. முன் வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் இறந்த பின்னர் பின்பற்றப்பட்ட மரணச்சடங்கு முறைகளை இரண்டு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (6 புள்ளிகள்)



kalvi.lk

03. i. இலங்கையில் அதிகாரம் மையப்படுத்தப்பட்ட நிர்வாகத்திற்குரித்தான பின்வரும் பணிகளையும் அப்பணிகளுடன் தொடர்புடைய நபர்களின் உத்தியோகப் பெயர்களையும் அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறைப்படி எழுதுக.

A. உணவுச்சாலை அதிகாரி

B. அரச செயலகத் தலைவர்

C. யானைப் பிரிவின் தலைவர்

(நட அதெக, ஹதி அதெக, ரூப அதெக, பனபெடிக, பதகு)

(3 புள்ளிகள்)

ii. பின்வரும் விடயங்கள் ஒவ்வொன்றுடனும் தொடர்புடைய நபர்கள் யார் என்பதை ஒழுங்குமுறையில் எழுதுக.

A. கிராமத்து இல்லத் தலைவர்களில் இருந்தே கமிக என்பவர் தெரிவுசெய்யப்படுவதாக ‘‘சமந்தபாசதிகா’’ நூலில் குறிப்பிட்டவர்

B. பருமகர்களுக்கு அரசாங்கத்தில் உயர்பதவிகளை வழங்கி அரசியல் அதிகாரத்தை மையப்படுத்தும் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்த மன்னன்.

C. தம்புள்ள விகாரை பாறைக் கல்வெட்டில் தன்னை நரேஸ்வர (மனிதர்களின் கடவுள்) என அறிமுகப்படுத்திய மன்னன்

D. கல்வெட்டுக்களில் தன்னை இனம் காட்டிக்கொள்ள காலிங்க சக்கரவர்த்தி பெருமான் எனக் குறிப்பிட்ட மன்னன்

(4 புள்ளிகள்)

iii. புராதன இலங்கையில் அரசுரிமை கிடைத்த விதத்தினை இரு உதாரணங்களின் அடிப்படையில் விளக்குக.

(5 புள்ளிகள்)

iv. இந்நாட்டின் முக்கியமான ஆட்சியாளர்களுள் 1ம் விஜயபாகு மன்னன் சிறப்பான ஒருவர் என்பதனை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(6 புள்ளிகள்)

04. i. பின்வரும் குளங்களைக் கட்டிய மன்னர்களின் பெயர்களை A, B, C ஒழுங்கு முறையில் எழுதுக.

A. கவுடுலுவாவி B. திஸ்ஸவாவி C. நாச்சதுவ வாவி

(3 புள்ளிகள்)

ii. பின்வரும் A, B, C மற்றும் D என்னும் விபரங்களுடன் தொடர்புடைய நீர்ப்பாசன அமைப்புக்களின் பெயர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.

A. தெதுறு ஒயா மூலமாக மாகல்ல வாவிக்கு நீரினைக் கொண்டு செல்வதற்கு அமைக்கப்பட்ட கால்வாய்



kalvi.lk

B. அம்பன் கங்கை வழியாகப் பராக்கிரம சமுத்திரத்துக்கு நீரைப் பாய்ச்சுவதற்காக அமைக்கப்பட்ட அணைக்கட்டு

C. மிகவும் நுண்மையான சரிவினைப் பயன்படுத்தி கலாவாவியில் இருந்து அநுராதபுர திஸ்ஸவாவிக்கு நீரைக் கொண்டு செல்ல அமைக்கப்பட்ட கால்வாய்

D. மழை நீரினால் ஊட்டம்பெற்ற குளங்களை கால்வாய்கள் மூலம் தொடுக்கும் குளத்தொகுதிக்கு உலர்வலய மக்கள் வழங்கிய பெயர் (4 புள்ளிகள்)

iii. குளமொன்றில் முக்கியமான தொழில்நுட்பக் கூறுகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றின் நிர்மாணிப்பு, பயன்பாடுகள் பற்றி சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

iv. புராதன காலத்தில் இலங்கையில் மந்தைவளர்ப்பு இடம்பெற்றிருந்தது என்பதற்கு மூன்று ஆதாரங்களை முன்வைத்து விளக்குக. (6 புள்ளிகள்)

05. i. கீழ்வரும் A, B, C ஆகியவற்றால் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களை ஒழுங்குமுறையில் எழுதுக.

A. கி.பி 1409 இல் செங்கோ தளபதி இலங்கை வந்தபோது அவரை முறைப்படி வரவேற்கத் தவறிய றைகம ஆட்சியாளன்

B. ஆடு, பசு, எருமை என்பவற்றைக் கொல்வோருக்கு மரணதண்டனை விதிக்கும் சட்டத்தை அறிமுகப்படுத்திய மன்னன்

C. பத்தினி தெய்வக் கோயில் ஒன்றின் திறப்பு விழாவிற்காக தென்னிந்தியாவின் சேர இராச்சியத்துக்கு சென்ற மன்னன் (3 புள்ளிகள்)

ii. இலங்கையில் இரண்டாவது நகரமயமாக்கல் காலகட்டத்துக்குரிய பண்டைய நிர்வாக நகரங்கள் நான்கினைத் தருக. (4 புள்ளிகள்)

iii. தம்பதெனியா இராசதானியை தலைநகரமாக மாற்றிய 3ம் விஜயபாகு மன்னனின் சமயப் பணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் சிறந்த ஆட்சியாளனாகக் கருதப்படுவதற்குரிய காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றினைச் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

06. பின்வரும் தகவல்களுடன் தொடர்புடைய A, B, C மூன்று நபர்கள் யாவர் என்பதனை ஒழுங்குமுறைப்படி குறிப்பிடுக.

A. கண்டி இராச்சியத்தில் முதன்முறையாக சுதந்திர அரசொன்றை உருவாக்கிய முதல் மன்னன்

B. தலதாமாளிகைக்கு மனங்கவர் பத்திரிப்பு எனும் எண் கோண மண்டபத்தை அமைத்த மன்னன்

C. ஆங்கிலேயர் இலங்கையில் கரையோரத்தைக் கைப்பற்றிய போது கண்டி இராச்சியத்தினை ஆட்சி செய்து கொண்டிருந்த ஆட்சியாளன் (3 புள்ளிகள்)



kalvi.lk

ii. பின்வரும் A, B, C, மற்றும் D எழுத்துக்களின் மூலம் தரப்பட்டுள்ள ஆட்சியாளர்கள் மற்றும் போர்த்துக்கேய கப்பித்தான் ஜெனரல் ஆகியோர்களை தரப்பட்டுள்ள அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறைப்படி எழுதுக

A. கி.பி 1594 இல் தந்துறையில் கண்டி இராச்சியப் படைகளுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் நடைபெற்ற போருக்கு தலைமை தாங்கிய போர்த்துக்கேய கப்பித்தான் ஜெனரல்

B. கி.பி 1602 இல் இடம்பெற்ற பலனப்பேருக்கு தலைமை தாங்கிய கண்டி இராச்சிய ஆட்சியாளன்

C. கி.பி 1630 இல் ரந்தெனிவல போருக்கு தலைமை தாங்கிய போர்த்துக்கேய கற்பித்தான் ஜெனரல்

D. கி.பி 1638இல் கன்னொருவைப் போருக்கு தலமை தாங்கிய கண்டி இராச்சிய ஆட்சியாளன்.

(1ம் விமலதர்ம சூரியன், செனரத், கொன்ஸ்தாந்தினு தசா, 2ம் இராஜசிங்கன், தொன் ஜெரோனி மோ த அசவேது, ஜெரோ லோபேஸ்த சூசோ) (4 புள்ளிகள்)

iii. கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் பௌத்தசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

iv. போர்த்துக்கேயரால் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு மேற்கொண்ட படையெடுப்புக்கள் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

07. i. பின்வரும் அரசியல் மாற்றங்கள் ஒவ்வொன்றும் எந்த அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் கீழ் இடம்பெற்றதென்பதனை A, B, C ஒழுங்கு முறையில் எழுதுக.

A. சட்டவாக்கக் கழகமும், சட்டநிர்வாகக் கழகமும் அமைக்கப்பட்டமை

B. விகிதாசார பிரதிநிதித்துவ முறை அறிமுகம்

C. இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் உருவாக்கப்பட்டமை

(3 புள்ளிகள்)

ii. 1931 டொனமூர் சீர்திருத்தத்தின் பிரதான அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக?(4 புள்ளிகள்)

iii. பிரித்தானியர் ஆட்சியினால் இந்நாட்டிலேற்பட்ட பொருளாதார மாற்றங்கள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

iv. கி.பி 1848 இல் பிரித்தானியருக்கு எதிரான கலகம் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் மூன்றினை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி III

08. i. பின்வரும் தாரக மந்திரங்கள் எந்த புரட்சியுடன் சம்பந்தப்பட்டவை என்பதனை ஒழுங்கு முறையில் எழுதுக.

A. ''உணவு, நிலம், சமதானம்'' B. ''சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்''

C. ''பிரதிநிதித்துவம் இன்றேல் வரியுமில்லை'' (3 புள்ளிகள்)

ii. கீழ்வரும் A, B, C, D ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு தகவல்களுக்குமுரிய விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

A. சுதந்திர ஐக்கிய அமெரிக்கக் குடியரின் முதல் ஜனாதிபதி

B. மக்கள் கருத்துக்களை முன்வைக்கும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பிரான்சிய பாராளுமன்றத்தின் சிறப்புப்பெயர்

C. ''சட்டத்தின் சாரம்'' என்ற நூலை எழுதிய தத்துவஞானி

D. ரஷ்யபுரட்சி நடைபெற்ற போது அந்த நாட்டின் தலைவர்

(ரூசோ, மொண்டெஸ்கியூ, ஜோர்ச் வாஷிங்டன், அபிரகாம் லிங்கன், வீ.ஜ லெனின், கெரன்ஸ்கி, ஸ்டேற் ஜெனரல்) (4 புள்ளிகள்)

iii. பிரான்சிய புரட்சியின் போது சாதாரண குடிமக்கள் அரசுக்கு செலுத்திய மூன்று விதமான வரிகளைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக. (5 புள்ளிகள்)

iv. ரஷ்யப் புரட்சியினால் அந்த நாட்டில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்களுக்கு ஒவ்வொரு உதாரணம் தந்து விளக்குக. (6 புள்ளிகள்)

09. i. இரண்டாம் உலகப்போரில் பங்கு கொண்ட நட்பு நாட்டு (நேசநாடு) அணியினைச் சேர்ந்த மூன்று நாடுகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. கீழ்வரும் A, B, C, D ஆகியவற்றால் குறிப்பிடப்படும் தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறையில் எழுதுக.

A. இரண்டாம் உலகப்போரின் போது நட்பு நாடுகள் அணிக்கு தலைமை தங்கிய பிரித்தானிய பிரதமர்

B. 2ம் உலகப்போரில் யூதர்களைக் கொன்றொழித்த ஹிட்லரின் இரகசிய பொலீஸ் படைக்கு வழங்கப்பட்ட பெயர்

C. 2ம் உலகப்போரின் போது ஜேர்மன் படைக்கு மோசமான தோல்வியை ஏற்படுத்திய ரஷ்ய இராணுவத்தின் சிறப்புப்படை

D. கி.பி 1961இல் அணிசேரா நாடுகளின் மாநாடு நிறுவப்பட்ட போது வழிகாட்டியாக திகழ்ந்த அப்போதைய யூகோஸ்லேவியாவின் ஜனாதிபதி (4 புள்ளிகள்)

iii. உலகில் சமதானத்தை பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)


iv. ஐக்கிய நாடுகள் சபை உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக எடுத்த முயற்சிகள் மூன்றினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)



kalvi.lk

சுட்டெண் : ……………………...............

1. (அ) (1)



1. (இ) (ii)




Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை

மூன்றாந் தவணை - 2018

வரலாறு

தரம் - 11 விடைகள் புள்ளித்திட்டம்

## பகுதி 1

| | | | |
|---|---|---|---|
| 01. (2) | 02. (4) | 03. (1) | 04. (2) |
| 05. (4) | 06. (2) | 07. (3) | 08. (2) |
| 09. (1) | 10. (3) | 11. (3) | 12. (4) |
| 13. (2) | 14. (4) | 15. (1) | 16. (3) |
| 17. (4) | 18. (2) | 19. (1) | 20. (4) |
| 21. (3) | 22. (1) | 23. (4) | 24. (4) |
| 25. (4) | 26. (3) | 27. (1) | 28. (3) |
| 29. (2) | 30. (4) | 31. (3) | 32. (2) |
| 33. (1) | 34. (4) | 35. (3) | 36. (4) |
| 37. (1) | 38. (2) | 39. (1) | 40. (3) |

(2x40=80 புள்ளிகள்)

## பகுதி II

01.அ.i. இடம் குறித்தல் 1 x 12 = 12 புள்ளிகள்

ii. இடம் குறித்தல் 1 x 6 = 6 புள்ளிகள்

ஆ.i. A. வலகம்பாகு B. அடோல்ப் ஹிட்லர்

C. ஶ்ரீ.விஜயராஜசிங்கன் D. D.S சேனநாயக்க

(4 புள்ளிகள்)

ii. i. இப்பன்கட்டுவ கல்லறை மாயனம் ii. கி.மு 700 – 450

iii. மாத்தளை

iv. அன்றைய சமூகத்தில் வாழ்ந்த பருமக போன்ற பிரமுகர்களால்

(4 புள்ளிகள்)

iii. i. ரந்தெனிவல நீர்த்தேக்கம் ii. நீர்ப்பாசனம் / மின் உற்பத்தி

iii. மேற்கு ஜேர்மனி iv. மினிப்பே அணைக்கட்டு

(4 புள்ளிகள்)

02. i. பாகியன்கல, பட்டதொம்பலென, கித்துள்கல பெலிலென (3 புள்ளிகள்)

ii.A. களுத்துறை B. இரத்தினபுரி

C. அம்பாந்தோட்டை D. மாத்தளை

(4 புள்ளிகள்)



kalvi.lk

iii.A. தாழ்நில உலர்வலயம், தாழ்நில இடை ஈரவலயம் / தாழ்நில ஈரவலயம்

B. தாழ்நில உலர்வலயம் :- மாடு, காட்டெருமை, கரடி, மான், மரை, சிறுமான் முள்ளம்பன்றி, முயல், மரஅணில், கீரி, குரங்கு, காட்டுக்கோழி, அணில், உடும்பு
தாழ்நில ஈரவலயம் :- நத்தைகள், காட்டு ஈரப்பலா, கிழங்கு வகைகள், காட்டுவாழை / பழவகைகள், தீத்தயா என்னும் நன்னீர் மீனினங்கள்

(இரண்டு வலயங்களையும் குறிப்பிட்டால் 2 புள்ளி)
யாதாயினும் ஒரு வலயத்தில் மூன்று உணவுகள்
3 புள்ளி)

iv. பாரிய கற்பாறைகளை ஒன்று சேர்த்து சதுர வடிவில் மயானத்தை அமைத்துக்கொள்ளல் இது கற்சுவரொன்றினால் பாதுகாக்கப்பட்டது. இங்கு சடலங்களை எரித்தும் பெறப்பட்ட அஸ்தி (சாம்பல்) மட்பாண்டங்களில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தன இவை அஸ்தி வைக்கப்பட்ட கல்லறை மயானம் என அழைக்கப்பட்டது. உ + ம் இப்பன்கட்டுவ, கல்சொஹன், யட்டிகல்பொத்த

- பச்சைக் களிமண்ணால் செய்யப்பட்ட ஓடம் போன்ற அமைப்பினுள் மட்பாண்டங்களில் அஸ்தி பாதுகாப்பாக வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டமை
  உ + ம் பெரகல, ஹல்துமுல்ல
- களிமண் பாத்திரங்களில் பாதுகாக்கப்பட்ட அஸ்தி (மனித சாம்பல்) குழி தோண்டிப் புதைக்கப்பட்டிருந்தது. இவை அஸ்திக் கலசம் வைக்கப்பட்ட புதைகுழி மயானம் என அழைக்கப்பட்டது.

(இரண்டைக் குறிப்பிட்டு விளக்கினால்
6 புள்ளிகள்)

03. i. A. பதகு B. பனபெடிக C. ஹதி அதெக (3 புள்ளிகள்)

ii. A. புத்தகோச தேரர் B. துட்டகைமுனு
C. குட்டகண்ண அபய D. நிஸ்ஸங்க மல்லன் (4 புள்ளிகள்)

iii.

- சகோதரனிடம் இருந்து சகோதரனுக்கு கிடைத்தமை
  உ + ம் : தேவநம்பிய திஸ்ஸ மன்னனின் மரணத்திற்கு பின்பு அவனது சகோதரர்கள் அரசர்களாகியமை முதலில் தேவநம்பிய திஸ்ஸனுக்கு பின்னர் உத்திய அரசுரிமை பெற்றமை.
- தந்தையிடம் இருந்து மகனுக்கு அரசுரிமை கிடைத்தமை
  உ + ம் கவன்திஸ்ஸ மன்னனுக்கு பிறகு துட்டகைமுனு அரசுரிமை பெற்றமை.

(இரு உதாரணங்களைக் குறிப்பிட்டு விளக்கினால் 5 புள்ளி)

iv. சோழர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தமை
நாட்டின் பெருளாதாரத்தை பலப்படுத்தியமை
பொலனறுவையை தலைநகராக்கியமை
விகாரைகளை புனர்நிர்மாணம் செய்து பௌத்த சமயத்தை மேம்படுத்தியமை.

மூன்று காரணிகள் - 3 புள்ளிகள்
விளக்கம் - 3 புள்ளிகள்



kalvi.lk

04. i. A. மகாசேனன் B. தேவநம்பிய தீசன் C. 2ம் முகலன்

(3 புள்ளிகள்)

ii. A. ரிதிபெந்தி கால்வாய் B. அங்கமடில்ல

C. யோத கால்வாய் / ஜயகங்கை D. எல்லங்காவ (4 புள்ளிகள்)

iii. குளக்கட்டு, அலைதாங்கி, கலிங்கதொட்டி, மடைக்கதவு, சுருங்கை

குளத்தின் கூறு 2 புள்ளிகள்

விளக்கம் 3 புள்ளிகள்

iv.

- மாடு வளர்ப்போருக்கென ஒதுக்கப்பட்ட "கோபாலகம்" பற்றிக் கல்வெட்டுக்களிலும் இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளன.
- கொழும்பு நூதனசாலையில் உள்ள 4ம் காசியப்ப மன்னனால் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் கிரிகெரி என்னும் சொல் காணப்படுகின்றது இது பால் பெற்றுக்கொள்ள வளர்க்கும் பசுக்களைக் குறிக்கின்றது.
- பொலன்னறுவை மெதிகிரியில் உள்ள எத்வெஹர மண்டபத்தின் வைத்தியசாலையில் நோயாளர்களின் தேவைக்காக மரணித்த ஆடுகளினதும் கோழிகளினதும், மாமிசம் மட்டும் பயன்படுத்த வேண்டுமென குறிப்பிடும் விடயம் கி.பி 9ம் நூற்றாண்டுக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளமை.
- பெண்ணொருத்தி பசுவிலிருந்து பால்கறக்கும் சிற்பம் ஒன்று சீகிரியாவில் தாதுகாப்பத்தில் மகாமேருக்கல்லில் செதுக்கப்பட்டுள்ளமை.

ஆதாரம் 3 புள்ளிகள்

விளக்கம் 3 புள்ளிகள்

Education கல்வி අධ්‍යාපන

05. i. A. வீர அழகேஸ்வர B. நான்காம் மஹிந்த C. 1ம் கஜபாகு

3 புள்ளிகள்

ii. தம்பதெனியா, யாப்பகூவ, குருநாகல், கம்பளை, கோட்டை

(4 புள்ளிகள்)

iii.

- கொத்மலையில் பிக்குகளால் ஒழித்து வைக்கப்பட்ட புனித சின்னங்களைக் கொண்டு வந்து பெலிகலையில் தலதா மாளிகை அமைத்து பிரதிஷ்டை செய்து வைத்தமை
- களணி விகாரையை புனர்நிர்மாணம் செய்தமை, தம்பதெனியாவில், விஜய சுந்தரராமய விகாரையைக் கட்டியமை,
- உபசம்பதா சடங்கை நிகழ்த்திப் புத்த சாசனத்தை தூய்மைப்படுத்தியமை
- அழிந்து போன பௌத்த சமய நூல்களை மீண்டும் எழுதுவித்தமை

இரண்டைக் குறிப்பிட்டால்

2 புள்ளிகள்

விளக்கம் 3 புள்ளிகள்



kalvi.lk

iv.

- சப்புமல் குமாரினின் கீழ் படையனுப்பி யாழ்ப்பாண இராச்சியத்தை வெற்றி கொண்டமை
- வன்னிப் பிரதேசத்தை கோட்டை இராச்சியத்தின் கீழ் கொண்டு வந்தமை
- மலைநாட்டு பிரதேச ஆட்சியாளனான ஜோதிய என்பவனின் கிளர்ச்சியை அம்புலுகல குமாரன் மூலம் அடக்கியமை
- முழு நாட்டையும் கோட்டை இராசதானியின் கீழ் ஒன்றுபடுத்திப் பொருளாதார ரீதியில் நாட்டை வளப்படுத்தியமை
- நாட்டின் கல்வி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்குப் பாரிய சேவையாற்றியமை

காரணிகள் மூன்று - 3 புள்ளிகள்

விளக்கம் - 3 புள்ளிகள்

06. i. A. சேனசம்பந்த விக்கிரமபாகு B. ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்

C. இராஜாதி ராஜசிங்கன்

(3 புள்ளிகள்)

ii. A. ஜெரோ லோபேஸ்த சூசோ B. 1ம் விமலதர்ம சூரியன்

C. கொன்ஸ்தாந்தினு த சா D. 2ம் இராஜசிங்கன்

(4 புள்ளிகள்)

iii.

- மன்னன் சீயம் நாட்டிற்கு தூதுக்குழுவொன்றை அனுப்பி உபாலி தேரர் உட்பட இன்னும் பல பிக்குகளையும் அழைத்து 1753ஆம் ஆண்டில் உபசம்பதாவை நடாத்தினான். அதன் மூலம் இன்றைய சீயம் நிக்காய இங்கு ஆரம்பிக்கப்பட்டது.
- வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர பிக்குவிக்கு "சங்கராஜா" பதவியை வழங்கி பௌத்த மறு மலர்ச்சியை ஏற்படுத்த அவருக்கு ஒத்துழைப்பை வழங்கியமை.
- கண்டி இராச்சியத்திலும் தாழ்நாட்டிலும் காணப்பட்ட விகாரைகளை புனரமைத்தமை

(நடவடிக்கைகள் இரண்டு 2 புள்ளிகள்)

(விளக்கம் 3 புள்ளிகள்)

iv.

- கண்டி இராச்சியத்தின் இயற்கையமைப்பு
- கண்டி மக்களின் போர்த்தந்திரமும் அரசர்களின் உபாயங்களும்
- கண்டிய மக்களின் அரச விசுவாசமும் ஆதரவும்
- போர்த்துக்கேயருடன் போராடச் சென்ற கரையோர போர்வீரர்கள் கண்டி இராச்சியத்தை அண்மித்ததும் கண்டி அரசனுடன் இணைந்து கொண்டமை

(காரணங்கள் 3 புள்ளி

விளக்கம் 3 புள்ளி)



kalvi.lk

07. i. A. கோல்புறூக் B. 1978ஆம் ஆண்டின் 2ம் குடியரசு யாப்பு C. சோல்பரி யாப்பு
(3 புள்ளிகள்)

ii. அரசுக்கழகம், சர்வசனவாக்குரிமை, நிர்வாகக் குழுமுறை
ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை, இனவாரிப் பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டமை, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் விரிவாக்கப்பட்டமை
(நான்கினைக் குறிப்பிட்டால் 4 புள்ளிகள்)

iii. தன்னிறைவுப் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்தமை, ஏற்றுமதி - இறக்குமதி பொருளதாரம் ஆரம்பிக்கப்பட்டமை, வர்த்தகப் பயிர்ச்செய்கையின் அறிமுகத்தால் உள் நாட்டு பயிர்ச்செய்கை வீழ்ச்சி, புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாகியமை (வங்கி, தொலைத்தொடர்பு), போக்குவரத்துத்துறை வளர்ச்சி (பெருந்தெருக்கள், புகையிரதம்), உட்கட்டமைப்பு வசதிகள் பெருகியமை
(எவையேனும் இரண்டைக் குறிப்பிட்டு விளக்கினால் 5 புள்ளிகள்)

iv. அரசின் நிலக்கொள்கை, அரசின் புதிய வரிக்கொள்கை, புதிய நீதிமன்ற முறை, கிராம சபைகள் செயலற்றுப் போனமை, அரசுக்கும் பொது மக்களுக்கும் இடையிலான தொடர்பு விலகிச் சென்றமை
காரணிகள் 3 புள்ளிகள்
விளக்கம் 3 புள்ளிகள்

## பகுதி III

08. i. A. ரஷ்யப்புரட்சி B. பிரான்சியப் புரட்சி
C. அமெரிக்க சுதந்திரப்போர்
(3 புள்ளிகள்)

ii. A. ஜோர்ச் வாஷிங்டன் B. ஸ்டேற் ஜெனரல்
C. மொண்டெஸ்கியூ D. கெரன்ஸ்கி
(4 புள்ளிகள்)

iii. டெலி, கெபெல். கெப்பிடேசன்
(மூன்றையும் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்
ஏதாவது ஒன்றை விளக்கினால் 2 புள்ளிகள்)

iv. அரசியல் மாற்றங்கள்

- சார்மன்னர்களின் ஆட்சி வீழ்ச்சியடைந்தமை
- சோசலிச ஆட்சி / கொம்மியூனிச ஆட்சி முறை உருவாகியமை
- மத்தியதர வகுப்பினர் நாட்டு நிர்வாகத்தை நடாத்த நியமிக்கப்பட்டமை
- ரஷ்யா சோவியத் சமவுடமைக் குடியரசு என்ற பெயரில் அறிமுகமானது

ஒன்றை குறிப்பிட்டு விளக்கினால் 3 புள்ளிகள்

பொருளதார மாற்றங்கள்

- நிலமானிய முறை நீக்கப்பட்டது
- தனியார் சொத்துக்கள் பொதுச் சொத்துக்களாக மாற்றம் பெற்றமை.
- சிறிய விவசாயப்பண்ணைகள் பாரிய விவசாயப் பண்ணைகளாக மாற்றமடைந்தமை
- தொழிற்சாலைகள், வங்கி, போக்குவரத்து போன்றவை மக்கள் மயப்படுத்தப்பட்டது

ஒன்றைக் குறிப்பிட்டு விளக்கினால் 3 புள்ளிகள்

09. i. ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா, ரஷ்யா (3 புள்ளிகள்)

ii. A. வின்ஸ்சன்ட சேர்ச்சில் B. கெஸ்டாபோ
C. செம்படைகள் D. மார்ஷல் டிட்டோ (4 புள்ளிகள்)

iii. பொருளாதாரத் தடைவிதித்தல்
அணு ஆயுதங்களைக் குறைக்கவும் அவற்றினை கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுத்தல்
சமாதானப்படையை ஈடுபடுத்துதல்
இரண்டு நடவடிக்கை – 2 புள்ளி
விளக்கம் - 3 புள்ளி


iv. சுயேஸ் கால்வாய் நெருக்கடி, வளைகுடா நெருக்கடி
கியூபாவின் ஏவுகணை நெருக்கடி
மூன்றினையும் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்கினால் 6 புள்ளிகள்



kalvi.lk

1. (அ) (1)

சுட்டெண் : ..................







(மறுபக்கம் பார்க்க)



kalvi.lk

1.(அ).(ii)




Education கல்வி



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page